1995 நவம்பர் 2] [பேரவைத் தலைவர்]

திரு. ஆ. சு. ரவீந்திரன் அவர்கள் 1985–ஆம் ஆண்டு முதல் 1988–ஆம் ஆண்டு வரை அன்றைய வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்கு பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ஏ.ஆர். ராமசாமி அவர்கள் 1962–ஆம் ஆண்டு முதல் 1967–ஆம் ஆண்டுவரை அன்றைய தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. எஸ். பாண்டியராஜ் அவர்கள் 1960–ஆம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலில் அன்றைய திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 10–3–1960 முதல் 1–3–1962 வரை செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களது மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய அப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று 2 மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று
2 மணித்துளிகள் அமைதி காத்தனர்).

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) பஞ்சாப் மாநில முதல்வர் திரு. பியாந்த் சிங் அவர்கள் மறைவு

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பஞ்சாப் மாநில முதல்வர் திரு. பியாந்த் சிங் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்.

“பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சரான திரு. பியாந்த் சிங் அவர்கள், 31–8–1995 அன்று தீவிரவாத வெறிக்குப் பலியான செய்தி அறிந்து, இப்பேரவை பெரும் அதிர்ச்சியடைந்துள்ளது.

மறைந்த பியாந்த் சிங் அவர்கள், பஞ்சாப் மாநிலம், லூதியானா மாவட்டம், பிலாஸ்பூர் கிராமத்தில், 1922-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 19ம் நாளன்று பிறந்தார். லாகூர் அரசு கலைக்கல்லூரியில் பயின்ற அவர், சிறிது காலம் இராணுவப் பணியாற்றிய பின்னர் அரசியலில் இறங்கினார். முதலில் 1960-ஆம் ஆண்டு வட்டார சமிதி (பிளாக் சமிதி)யின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், ஒன்பது ஆண்டுகள் கழித்து பஞ்சாப் மாநில சட்டமன்றப் பேரவைக்குச் சுயேச்சை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாயல் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகத் தொடர்ந்து நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1980-ஆம் ஆண்டு நான்காவது முறையாகப் பஞ்சாப் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தபோது, திரு. தர்பாரா சிங் அவர்களது அமைச்சரவையில் வருவாய்த்துறை அமைச்சராகப் பணியாற்றினார். பஞ்சாப் மாநிலத்தில் பிரிவினை சக்திகளும், பயங்கரவாதமும் தலைதூக்கி நின்ற காலத்தில் 1992-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மாநிலத்தின் 13-வது முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

அவர், தன் ஆட்சிக் காலத்தின் பயங்கரவாதத்தை ஒழிப்பதை தனது ஒரு நோக்குத் திட்டமாகக் கொண்டிருந்தார் என்றால் அது மிகையாகாது. தனது இறுதி மூச்சு உள்ளவரை, பஞ்சாப் மாநிலத்தில் அமைதி காக்க அரும்பாடுபட்டு வந்தார். நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் பஞ்சாப் மாநிலத்தில் பங்கம் நேர்ந்திடாது பாதுகாக்க அரும்பணியாற்றி அதன் காரணமாக தன் இன்னுயிரையும் இழந்த அப்பெருமகனாரின் மறைவினால், அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது".

தீர்மானத்தை நிறைவேற்றும் வகையிலும் மறைந்த அப்பெருமகனாருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் இப்பேரவையின் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று, இரண்டு நிமிடங்கள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று,
இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)